# பள்ளிக்கல்வி துறைச் செயலருக்கான வினாப்பட்டியல்

இரண்டாவது மாநில நிதி ஆணையம் கீழ்க்கண்ட பரிந்துரைகளை செய்துள்ளது

1 (அ) தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அவர்களுக்கு தற்போதுள்ள உரிமைகளுக்குப் பாதகமின்றி உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிய மாற்றப்படலாம்

அல்லது அவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் அயற்பணி

(ஆ) முறையில் நியமிக்கப்படலாம்.

2. உதவிக் கல்வி அலுவலரால் பராமரிக்கப்படும் கல்வி குறித்த நிதி ஒதுக்கீடுகள் ஊராட்சி ஒன்றிய கல்வி நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படலாம். ஊராட்சி ஒன்றிய கல்வி நிதிக்கணக்கு தற்போது செயல்பாட்டில் உள்ளது. இதனை ஊராட்சி ஒன்றியங்களுக்கான மானியங்களாக கொடுக்கலாம். கல்வி நிதிக்கணக்குகளைப் (LF III- Account) பராமரிக்கும் அதிகாரத்தை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து திரும்பப்பெற்று உதவிக்கல்வி அலுவலர்களுக்கு அவ்வதிகாரத்தை அளிக்கலாம். உதவிக் கல்வி அலுவலர்கள் அரசிடமிருந்து மானியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதே நேரத்தில், ஊராட்சி ஒன்றியத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், ஏனைய ஒன்றிய அலுவலர்களும் கல்விப் பணியினை திறம்பட கண்காணிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

3 தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களை பராமரித்தல், நடத்தாட்டிகள் மற்றும் ஏனைய சில்லறைச் செலவினச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கான சம்பளம் பெறுதல் ஆகியவற்றிற்காக அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தற்போதுள்ளது போல் தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய பொது நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படலாம் தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர்களால் பராமரிக்கப்பட்டு வரும் கல்வி நிதிக்கணக்குகளைப்( F-III) பராமரிக்க உதவிக் கல்வி அலவலர்களும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் சேர்ந்து கையெழுத்திட வேண்டும்.

மேற்படி பரிந்துரைகள் அனைத்தும், அரசு செயலாளர்களின் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை எவ்வித ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து இது சம்பந்தமாக முறைப்படியான குறிப்பு ஏதேனும் பெறப்பட்டுள்ளதா? இப்பரிந்துரைகள் மீதான தற்போதைய நிலை பற்றி இவ்வாணையத்திற்கு தெரிவிக்கப்படலாம்.

2) 1980 வரை தமிழ்நாட்டில் இருந்தது போன்றும் ஆந்திரபிரதேசம் மற்றும் கேரளா மாநிலங்களில் உள்ளது போன்றும் தொடக்கக்கல்வித்துறையை செயல்படுத்தும் அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கலாம். புதியதாக பள்ளிகள் நிறுவுதல், புதியதாக ஆசிரியர்கள் மற்றம் ஆசிரியர்களல்லாத பணியாளர்களை அரசின் நியமன விதிமுறைகளைப் பின்பற்றி

ஊராட்சி ஒன்றிய அளவில் நியமனம் செய்தால் காலப்போக்கில் அனைத்துப் பணியாளர்களும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பட்டில் வருவதுடன், அரசின் நிதிச்சுமையும் ஒருகுறிப்பிட்ட அளவிற்குக்குறைக்கப்படலாம். இதன்மீது தங்கள் கருத்து என்ன?

3) ஊராட்சி ஒன்றியங்களுக்கு, தொடக்கக்கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள், பொறுப்புகள் வழங்கப்படுவதால், அரசியலமைப்புச் சட்டப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கான பொறுப்புகளை மாற்றம் செய்யும் உரிமைக் கட்டளையை நிறைவேற்ற முடியும். இதுபற்றி தங்களின் கருத்து என்ன?